இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 198 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – மாசி 16 – சனிக்கிழமை 28 பிப்ரவரி 2026 – கோவை ★★ 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 198: Thiruvalluvar Year - 2057 - Maasi 16 - Saturday 28 February 2026 - Kovai ★★ 28 Pages ₹ 5.00

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் - முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் கழகத்தில் இணைந்தார் !





கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (27.2.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஓ.பி.ரவீந்திரநாத், சட்டமன்ற உறுப்பினர் பி.ஐயப்பன் மற்றும் நிருவாகிகள் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன், கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என்.நேரு, கழக இளைஞர் அணிச் செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணக்குமார், செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி எஸ்.முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாப்பான - விரைவான பயணத்தை உறுதி செய்திட

# திருவான்மியூர் - உத்தண்டி இடையே ரூ.2,100 கோடியில் மேம்பாலம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!






முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2026) தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை 2100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, பிப்.28-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.2.2026) தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் சார்பில் கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மி யூர் முதல் உத்தண்டி வரை 2100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை தொடங்கி வைத்தார்.**

**திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுதல்**

தமிழ்நாட்டில் நான்கு வழிச்சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகள் உள்ளிட்ட முக்கிய சாலை உள்கட்டமைப்புத் திட்டங்களை பொதுதனியார் பங்களிப்பு மூலம் செயல்படுத்த 2024ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் (TANSHA) நிறுவப்பட்டது.

2025-2026 ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், சென்னையில் பெருகி வரும் போக்குவரத்து நெரிசலை கையாளும் விதமாக சென்னை நகரின் கிழக்கு கடற்கரைச் சாலையில் திருவான்மியூரில் இருந்து உத்தண்டி வரை நான்கு வழித்தட சாலை மேம்பாலம் தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் (TANSHA) மூலம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையம் (TANSHA) மூலம் கிழக்கு கடற்கரை சாலையில் திருவான்மியூர் முதல் உத்தண்டி வரை, சுமார் 13.30 கி.மீ. நீளத்திற்கு 2100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டினார்.

### சாய்வுப் பாதைகள்!

இந்த சாலை மேம்பாலம் பொது-தனியார் பங்களிப்பு (PPP) அடிப்படையில், ஹைப்ரிட் ஆனுட்டி மாடல் (HAM) மூலம் செயல்படுத்தப்படுகிறது. இந்த மேம்பாலம், திருவான்மியூரில் ECR-Lattice Bridge சாலை சந்திப்பிற்கு முன்பாக தொடங்கி, உத்தண்டியில் முடிவடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இருவழிப் போக்குவரத்துக்காக 17.25 மீட்டர் அகலத்துடன், 5.5 மீட்டர் உயரத்தில், நான்கு வழித்தட சாலை மேம்பாலம் முழு நீளத்தில் அமைக்கப்படவுள்ளது. போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், திருவான்மியூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், நீலாங்கரை மற்றும் அக்கரை போன்ற இடங்களில் இருந்து மேலேறும் மற்றும் கீழிறங்கும் சாய்வுப் பாதைகள் (Ramps) அமைக்கப்படுகின்றன.

மேலும், அக்கரை, நீலாங்கரை மற்றும் Lattice Bridge சாலை போன்ற முக்கிய சந்திப்புகள் மேம்படுத்தப்படுவதுடன், சில பகுதிகளில் தற்போதுள்ள சாலைகள் ஆறுவழிச் சாலைகளாக அகலப்படுத்தப்பட உள்ளன. இத்திட்டத்தின்கீழ், சாலை வரைகுறிகள், சாலை குறியீட்டு பலகைகள், பிரதிபலிக்கும் மற்றும் சூரிய சக்தி ஸ்டட்கள், ஒலி தடுப்பு சுவர்கள், பாதுகாப்பு தடுப்புகள் உள்ளிட்ட நவீன வசதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அத்துடன், தூண்களுக்கிடையிலான பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளும், உயர்த்தப்பட்ட வழித்தடம் முழுவதும் தொடர்ச்சியான எல்.இ.டி. விளக்குகளும் அமைக்கப்பட உள்ளன.

இத்திட்டம், நிறைவேற்றப்படுவதன் மூலம், கிழக்கு கடற்கரை சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசல் குறைவதோடு, சென்னை மாநகர மக்களுக்கு பாதுகாப்பான, விரைவான மற்றும் வசதியான பயணம் உறுதி செய்திடவும் வழி வகுக்கும்.

இந்நிகழ்ச்சியில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் உறுப்பினர் (நிர்வாகம்) தெ.பாஸ்கர பாண்டியன், தமிழ்நாடு மாநில நெடுஞ்சாலை ஆணையத்தின் உறுப்பினர் (தொழில்நுட்பம்) ஜே.தேவராஜு, சிறப்பு அலுவலர் (தொழில்நுட்பம்) இரா.சந்திரசேகர் நெடுஞ்சாலைத்துறை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# என்.சி.இ.ஆர்.டி. 8ஆம் வகுப்பு பாடத்தில் சர்ச்சை!

## உச்சநீதிமன்றம் கடும் கண்டனம்!

*புதுடெல்லி, பிப்.28-*

*என்சிஇஆர்டி 8ம் வகுப்பு சமூக அறிவியல் பாடத்திட்டத்தில், 'நீதித்துறையில் ஊழல்' என்ற பகுதி பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. இதற்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி கண்டனம் தெரிவித்துள்ளதோடு, தாமாக முன்வந்து நடவடிக்கை எடுப்பேன் என்றும் எச்சரித்துள்ளார்.*



*தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில் (என்சிஇஆர்டி) சமூக அறிவியல் பாடத்தில், நீதித்துறையில் ஊழல் என்ற பகுதி இடம்பெற்றுள்ளது. 'நமது சமூகத்தில் நீதித்துறையின் பங்கு' என்ற தலைப்பில் அந்தப் பகுதி இடம்பெற்றுள்ளது. இதில் நீதிமன்றங் களில் படிநிலை, நீதிக்கான நடைமுறைகளைத் தாண்டி, நீதித்துறையில் ஊழல் மற்றும் லட்சக்கணக்கான வழக்குகள் நிலுவையில் உள்ளது குறித்து விளக்கப்பட்டுள்ளது.*

*தவிர, "நீதித்துறையில் ஊழல் நடைபெறும் சம்பவங்கள் பொதுமக்களின் நம்பிக்கையில் பாதிப்பை ஏற்படுத்தும்" என்று உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி பி. ஆர்.கவாய் கடந்த 2025ம் ஆண்டு ஜூலை மாதம் தெரிவித்த கருத்தும் என்சிஇஆர்டி 8ம் வகுப்பு பாடத்தில் கூறப்பட்டுள்ளது.*

*இந்நிலையில், மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் உச்ச நீதிமன்றத்தில் இந்த விவகாரம் குறித்து புகார் எழுப்பினார்.*

*அதற்கு தலைமை நீதிபதி சூர்ய காந்த் கூறியதாவது:-*

*"நீதித்துறை உட்பட எந்த அமைப்புக்கும் களங்கம் ஏற்படுத்துவதை அனுமதிக்க முடியாது. இந்த விவகாரத்தில் சட்டம் தன் கடமையை செய்யும். நீதித்துறையின் தலைவர் என்ற முறையில் என் கடமையை நான் செய்துள்ளேன். இது திட்டமிட்ட செயலாக உள்ளது. இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.*

*இதுகுறித்து தானாகவே முன்வந்து நடவடிக்கை எடுக்கப்படும். ஒன்றிரண்டு நாட்கள் பொறுத்திருங்கள். என்சிஇஆர்டியின் பாடத்தால் நாட்டின் அனைத்து உயர் நீதிமன்ற நீதிபதிகள், உச்சநீதிமன்ற நீதிபதிகள் கலங்கி போயுள்ளனர்.*

*இவ்வாறு தலைமை நீதிபதி சூர்ய காந்த் கூறினார்.*